# 11.07.2022ம் திகதிய 52வது மாதாந்த சபைக்கூட்டம்

நேரம் : மு.ப 9.30 மணி
காலம் : 11.07.2022ம் திகதி திங்கட்கிழமை
இடம் : சபா மண்டபம் தலைமை அலுவலகம்
தலைமை : கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன்

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

| | | |
|---|---|---|
| ➢திரு.பத்மநாதன் மயூரன் | - | கௌரவ தவிசாளர் |
| ➢திரு.இராஜமனோகரன் ஜெயகரன் | - | கௌரவ உபதவிசாளர் |
| ➢திருமதி.கௌசலா சிவா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கணேசு முருகையா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.இராசையா இராசலிங்கம் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.செல்வநாயகம் சிவலோஷன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.தெய்வேந்திரம் கிரிதரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.ரவிதாஸ்.கோமதி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.வல்லிபுரம் ஶ்ரீகணேசா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.வாசுகி சுதாகர் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.குமாரசாமி மதுசுதன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢செல்வி.குலேந்திரன் பிரிந்தா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢செல்வி.விஜயகுமார் சிந்துஜா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் | - | செயலாளர் |

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

| | | |
|---|---|---|
| ➢திரு.கந்தையா குகானந்தன் | - | கௌரவ உறுப்பினர் |

மேற்படி கூட்டமானது மு.ப 9.30 மணியளவில் கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 51வது மாதாந்த கூட்ட அறிக்கை (யூன்) சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/01**
21.06.2022ம் திகதிய 51வது மாதாந்த சபைக்கூட்ட அறிக்கையில் 21.06.2022/14 ஆம் இலக்க தீர்மானத்தில் தவறுதலாக மயானப்புனரமைப்பிலிருந்து என அச்சிடப்பட்டதற்கு பதிலாக வீதிப்பராமரிப்பிலிருந்து என்ற திருத்தத்துடன் அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புகள். குறித்த அறிவிப்பில் கௌரவ தவிசாளர் அவர்களினால் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் அட்டைகளினை பூரயப்படுத்தப்படாதவர்கள் அதனை விரைவாக பூரணப்படுத்தி வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறுகையில் 2022 பாதீட்டில் வட்டார ரீதியாக மலசலகூடம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கான மலசலகூட முன்மொழிவுகள் இதுவரை வழங்காதவர்கள் அவற்றினை விரைவாக வழங்கியுதவுமாறும் மழைகாலம் நெருங்குவதால் அவற்றினை விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து கால அவகாசத்துடனான பிரேரனையில் கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களின் எமது சபையின் ஏற்பாட்டில் சில முக்கிய அரச திணைக்களங்கள், பல்கலைக்கழகம். தோழில்நுட்பக்கல்லூரி அகியவற்றினை இணைத்து உள்ளூர் குறுந்தூர பஸ்.்.வான் சேவையொன்றை அறிமுகம் செய்தல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக்கொள்வதற்கு கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/02**

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களது எமது சபையின் ஏற்பாட்டில் சில முக்கிய அரச திணைக்களங்கள், பல்கலைக்கழகம். தொழில்நுட்பக்கல்லூரி அகியவற்றினை இணைத்து உள்ளூர் குறுந்தூர பஸ்/வான் சேவையொன்றை அறிமுகம் செய்தல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்குசபை சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.அ.அகிலாண்டரூபி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தமது பிரேரணை தொடர்பாக கௌரவ உறுப்பினர் திரு.குமதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் தமது பிரேரணையானது ஒரு சேவையினை அடிப்படையாகக் கோண்டே முனமொழிவதாகவும் தற்போதைய இடர்பாடுகளில் சேவையாற்ற முடியாதவிடத்தும் இனிவரும் காலத்தில் இதனை சபையால் முன்னெடுக்கலாம் எனவும் எமது பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, நல்லூர் பிரதேச செயலகம் ஆகியன உள்ளடங்கலாக இருப்பதனால் குறித்த பகுதி வீதிகள் காப்பெற்றாக உள்ளமையாலும் ஒரு பஸ் வாகன சேவையினை உத்தியோகத்தர்களுக்கு வழங்கலாம். குறித்த நேரத்தில் அவர்களுக்கான உள்ளூர் சேவையினை வழங்கி விட்டு எமது சபையில் தரித்திருந்து பின்னரும் அவர்களுக்கான சேவையினை ஏற்படுத்தி அதனை அமுல்படுத்தினால் எல்லா சபைகளுக்கும் ஒரு முன்மாதிரியான சபையாக எமது சபை இருக்கும் எனவும் தற்போது இதனைச் செயற்படுத்த முடியாது விட்டாலும் எதிர்காலத்திலாவது செயற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் தம்மால் 2 வருடத்திற்கு முன்னர் நல்லூர் பிரதேசசபைக்குட்பட்டவர்களுக்கு குறிப்பாக கிழக்கரியாலை, மணியந்தோட்டம் போன்ற தூர இடங்களில் இருந்து சோலைவரி உட்பட திருநெல்வேலிச் சந்தை மற்றும் ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு பஸ் சேவையினைப் ஏற்படுத்துமாறும் பிரேரணையாக முன் வைத்திருந்ததாகவும் அது தொடர்பாக கோண்டாவில் டிப்போவிற்குச் சென்று கலந்துரையாடிய போது குறித்த சேவைக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுகின்றதாகவும் குறித்த ஆளணி, ஒழுங்குகள் செய்து தரும் சந்தர்ப்பத்தில் அதற்கான ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தனர். அதில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக தமது பிரேரணை கடந்த இரண்டு வருடங்களாக கிடப்பில் உள்ளதாகத் தெரிவித்ததுடன் தமது பிரேரணையினை ஒத்த பிரேரணையினை கௌரவ உறுப்பினரும் இன்று கொண்டு வந்துள்ளார். இது தொடர்பாக அன்று முயற்சி எடுத்திருந்தோம். அதன்போது தமிழ்தேசியக்கூட்டமைப்பு ஆட்சியில் இருந்த காலத்தில் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்கள் தமது நாளாந்த கடமைகளை மேற்கொள்ளும் தூர நோக்குடன் பஸ் சேவை ஒன்றை மேற்கொள்வதற்கு தாமும் குறித்த பிரேரணையினை முன்வைத்திருந்ததாகவும் அன்று அது செயற்படுத்தப்படவில்லை. தற்போதைய தவிசாளர் இதனை முன்னெடுப்பது ஆரோக்கியமானதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் முன்வைப்பட்டது பயணிகளுக்கான பொதுப் போக்குவரத்து பஸ் சேவை எனவும் தம்மால் முன்வைக்கப்பட்டுள்ளது உத்தியோகத்தர்களுக்கு மட்டும் அலுவலகம் ஆரம்பிக்கும் நேரத்திற்கும் முடிவடையும் நேரத்திற்கும் ஆக இரு தடவைகள் சபையால் சேவை வழங்குவது தொடர்பான பிரேரணை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர்களான திரு.க.முருகையா, திரு.செ.சிவலோசன் ஆகியோர் மு.ப.10.10 மணியளவில் கூட்டத்திற்கு சமூகமளித்தனர்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் இருவரது பிரேரணைகளும் ஆக்கபூர்வமானவை எனவும் ஆனால் எமது தொகுதிக்கு உட்பட்டுத்தான் உத்தியோகத்தர்கள் எமது தொகுதியிலுள்ள திணைக்களங்களில் கடமையில் இருக்கின்றார்களா என்பது கேள்விக்குறி எனவும் கிழக்கரியாலையிலிருந்து

சோலைவரி செலுத்த வரும் மக்கள் இரு பஸ் எடுத்து சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரனால் முன்னைய தவிசாளர் பதவிக்காலத்தில் பிரேரணை கொண்டு வரப்பட்டு தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டிருந்தது. தாம் அதனையும் கவனம் செலுத்தி வரும் காலத்தில் அதற்கான நடவடிக்கையினை எடுப்போம் எனவும் தற்போது கொள்கை அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றலாம் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் தற்போது கொள்கை அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு வரும் காலத்தில் குறித்த சேவையினை வழங்குவது தொடர்பான ஒரு கேள்விக்கொத்தை பிரதேசசெயலகம் மற்றும் ஏனைய நிறுவனம் பொது அமைப்புகளுக்கு வழங்கி சேவை பெற விரும்பின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிப்பதனூடாக நாம் மக்கள் சேவைக்கான இயங்கின்கொண்டிருப்பதும் இன்றைய இடர்காலத்திலும் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒரு செய்தியாக அமையும் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் உத்தியோகத்தர்கள் சிறிய அளவில் காணப்படுகின்றனர். ஆனால் பொதுமக்கள் பிரதேசசபை, பிரதேசசெயலகம், வங்கி நடவடிக்கைகள் மற்றும் திருநெல்வேலிச்சந்தை போன்ற தமது அன்றாட கடமைகளை பெற்றுக்கொள்வதற்கு பொதுப் போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கானவே தாம் குறித்த பிரேரணையினை முன்வைத்ததாகவும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் தற்போது CTB உடன் தொடர்பு கொண்டு பொதுப் போக்குவரத்தினை மேற்கொள்வது தான் சிறந்தது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர்களான திருமதிசெ.சச்சிதானந்ததேவி, திரு.க.திருஞானராசா ஆகியோர் மு.ப.10.12 மணியளவில் கூட்டத்திற்கு சமூகமளித்தனர்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் கருத்துரைக்கையில் இன்றைய காலத்தில் தேவையான ஒன்று. உத்தியோகத்தர்கள் அநேகர் அலுவலகத்திற்குச் செல்ல முடியாத நிலை அத்துடன் சம்பள வெட்டு பிரச்சளை, லீவுப் பிரச்சனை உள்ளது. அத்தடன் மக்களுக்கு சேவையினை வழங்கமுடியாத நிலையும் இருக்கின்றது. ஆகவே இதனை பின்னர் நடைமுறைப்படுத்துவதிலும் பார்க்க தற்போது செய்வது சாலச்சிறந்தது எனத் தெரிவித்தார்.

கௌரவ உபதவிசாளர் அவர்கள் கருத்துரைக்கையில் நாம் முதலில் மக்களுக்கு சேவை வழங்க வேண்டும். கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் கூறியது போல எமது பகுதியில் பொதுப் போக்குவரத்துச் சபைக்குரிய சில வழித்தடங்கள் உள்ளன. அதில் ஒன்று உப்புமடத்திலிருந்து 808 வழித்தட பஸ் சேவை உள்ளது. அதேபோல ஆனைக்கோட்டையிலிருந்தும் ஒரு வழித்தடம் உள்ளது. CTB வைத்துச் நாம் சேவையினை மக்களுக்கு வழங்கலாமே தவிர தனியார் பிரிவை வைத்து மேற்கொள்வதற்கான செலவுகள் அதிகம். ஆகவே இலங்கை போக்குவரத்து சபையுடன் கலந்து விசேடமாக குறித்த போக்குவரத்து வழித்தடங்களை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதால் அது மக்களுக்கும் அத்துடன் அரச ஊழியர்களுக்கும் அது மிகப்பயன் தரும் சேவையாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்கள் கருத்துரைக்கையில் எமது சேவையில் மக்களை முன்னிலைப்படுத்த வேண்டும். அதற்கமைவாக இதனை நாம் கொள்ளை அடிப்படையில் தீர்மானமாக எடுத்து மக்களுக்கான சேவையில் பஸ் வழித்தடத்தினையும் பார்த்து இயக்க முடியுமாக இருந்தால் போக்குவரத்து சபையுடன் இனைந்து அதனையும் இயங்கு நிலைக்கு கொண்டு வருவதுடன் கிழக்கு அரியாலை மிக முக்கியம். அங்கிருந்து வருபவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதனையும் நடைமுறைக்கு சாத்தியமாயின் அமுல்படுத்தலாம். தற்போது கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுத்து அதற்குரிய சிபார்சுகளை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்வது சிறந்தது எனத் தெரிவித்ததை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் மு.ப.10.15 மணியளவில் கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

**தீர்மானம் 11.07.2022/03**

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பஸ் வழித்தடத்தனை பார்வையிட்டு அவற்றில் முக்கிய இரு வழித்தடத்தினை போக்குவரத்து சபையுடன் இனைந்து இயங்கு நிலைக்கு கொண்டு வருவதுடன்

கிழக்கு அரியாலை இருந்து வருபவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதால் அங்கிருந்தும் பஸ் சேவை மேற்கொள்வது நடைமுறை சாத்தியமாயின் அதனையும் வரும் காலத்தில் அமுல்படுத்துவதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து உப குழுக்களின் சிபார்சுகளில் முதலாவது 07.07.2022 ஆம் திகதிய நிதிக்குழு சிபார்சுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு குறித்த எரிபொருள் செலவினத்தை ஈடுசெய்வது தொடர்பான வகைமாற்றத்தினை சபையில் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்வது எனும் சிபார்சும் அத்துடன் வாகனத்திருத்தம் மற்றும் வாகனப் பராமரிப்பு தொடர்பான செலவினத்தை ஈடுசெய்வதற்கான வகைமாற்றத்தினை சபையில் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்வது எனும் சிபார்சும் சபையில் ஆராயப்பட்டது. அதன் போது கௌரவ தவிசாளர் அவர்களினால் ஏற்கனவே எமக்கு 7.5 மில்லியன் நிதி தெவையாக உள்ளமையால் வீதிப்பராமரிப்பு வேலைத்திட்டத்திற்கு ஏற்கனவே 15 மில்லியன் நிதி பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காரைமுனங்கு இந்து மயான எரிகொட்டகை புனரமைப்பிற்கு ஒரு மில்லியன் வகைமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. எஞ்சிய 14 மில்லியன் நிதி உள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்ட விலையேற்றம் காரணமாக வீதி பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளமையாலும் தற்போது எரிபொருள் அவசியமாக இருப்பதால் 7.5 மில்லியன் நிதியினை வகைமாற்றம் மேற்கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**தீர்மானம் 11.07.2022/04**

சபை வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்பு செலவீனத்தை சீராக்கம் செய்வதற்கு 2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் வீதிப்பராமரிப்பில் ஒதுக்கி எஞ்சிய 14 மில்லியன் நிதியில் 7.5 மில்லியன் நிதியினை வகைமாற்றம் மேற்கொள்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உபகுழு சிபார்சுகளில் அடுத்து 27.06.2022ஆம் திகதிய சந்தைக்கு சிபார்சுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையில் விரிவாக ஆராயப்பட்டன. அதன்போது முதலாவது சிபார்சான சந்தையில் இடம்பெறும் திருட்டுகளை குறைப்பதற்கு ஏதுவாக 5 மணிக்கு பின்னர் வியாபாரம் செய்பவர்கள் சபை அனுமதியுடன் சந்தைக்கீழ் தளத்தில் வியாபாரம் செய்வதற்கு சந்தைக்குழு சிபார்சு செய்கின்றது. அதற்கான சபை அனுமதியினை கௌரவ தவிசாளர் அவர்கள் சபையிடம் கோரியதுடன் கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்களை குறித்த விடயம் தொடர்பான நிலை தெரியும் எனவும் அது தொடர்பாக விளக்கமளிப்பார் எனத் தெரிவித்ததை தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்களினால் 4 அல்லது 5 வியாபாரிகளே மாலை 4 மணிக்கு பின்னர் 7 மணிவரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதனை கண்காணிப்பது தொடர்பாக எமது மேற்பார்வையாளர்கள் தமது கடமைகளை சரியாக ஆற்றுவதில்லை எனவும் துப்பரவுப்பணிகள் காலை, மாலை தை மாதத்திற்கு பின்னர் சரியாக நடைபெறவில்லை. காவலாளி சரியாக செயற்படவில்லை. கடமைகளை சரிவர மேற்கொண்டால் களவு நடைபெற மாட்டாது. ஆகவே அவ்வாறான மேற்பார்வையாளர்கள், காவலாளிகள் தேவையில்லை. அவர்கள் சரிவர தமது கடமைகளை மேற்கொள்ளாமையினால் அவர்களை மாற்ற வேண்டும் அல்லது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன் சந்தைக்குழுவில் உபதவிசாளர் அவர்கள் மன்வைத்த குற்றச் சாட்டினையும் தெரிவித்ததுடன் அங்கு நடைபெற்ற சில குற்றச் செயல்களையும் தெரிவித்து சந்தைக்குழு தலைவராகவுள்ள கௌரவ தவிசாளர் அவர்களே நீங்கள் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் செயலாளர் அவர்கள் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்து மிக நீண்ட காலமாக சந்தை ஒழுங்குபடுத்தலுக்கு சிரமப்படுகின்றோம். வருமானப்பரிசோதகரை புதிதாக மாற்றி சந்தையினை ஒழுங்கமைத்த போதிலும் அது திருப்பிகரமாக இல்லாத நிலை காணப்படுகின்றது. அங்கு 3 மேற்பார்வையாளர்கள் இருக்கின்றார்கள். தாம் கிழமையில் இரு தடவையாவது சென்று வருவதுண்டு. அவ்வாறு செல்லும் போது அங்கு அவர்கள் இருப்பதில்லை. அதனை தாம் நீண்ட நாட்களாக அவதானித்துள்ளதாகவும் இதனை கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கையினை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாகவும் இதுபோன்ற குறைபாடுகள் மேலும் நடைபெறாது என்பதற்கான வாக்குறுதி வழங்குவதாகத் தெரிவித்தார். அதன்போது கௌரவ உறுப்பினர்

திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் மேற்பார்வையாளர்கள் கடமை நேரத்தில் இல்லாதமை தாங்களே அவதானித்துள்ளமையால் அவர்களுக்கு எதிராக விளக்கம் கோரிய கடிதம் வழங்குவதுடன் அதனை தனிநபர் கோவையிலும் கோவைப்படுத்துவதன் மூலமாக அவர்களுக்கு ஒரு பயம் ஏற்படும் எனத் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் அவர்களது எதிர்காலத்தை பாதிக்கும் எனும் நோக்கிலேயே குறித்த கடித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் அதனை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்ததை தொடர்ந்து குறித்த சிபார்சுகள் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் மு.ப.10.35 மணியளவில் சபைக்கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் மு.ப.10.35 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தார்.

**தீர்மானம் 11.07.2022/05**

சபையால் திருநெல்வேலிச்சந்தையில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் பி.ப 5 மணிக்கு பின்னர் வியாபாரம் செய்ய விரும்பின் சபை அனுமதியுடன் கீழ் தளத்தில் வியாபாரம் செய்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/06**

சுத்திகரிப்பு வேலையினை மேற்கொள்ளும் பணியாளர்கள் வரவின்மை அவதானிக்கப்பட்டுள்ளமையால் குறித்த நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுப்பதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/07**

திருநெல்வேலிச்சந்தையின் பலாலி வீதியில் அமைந்துள்ள வாயிலை எமது எனைய வாயில்கள் பூட்டப்படும் போது அதனையும் பூட்டி அதிகாலை 4 மணிக்கு பின்னர் திறக்குமாறு இராணுவத்தினருக்கு பணிப்பதெனவும் அதற்கு இராணுவத்தினர் உடன்படாத சந்தர்ப்பத்தில் குறித்த வாயிலை நிரந்தரமாக பூட்டுவதெனவும் குறித்த விடயங்களை இராணுவ மேலதிகாரிகளுக்கு அறிவிப்பதெனவும் கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/08**

திருநெல்வேலிச்சந்தையில் கடமையிலுள்ள மேற்பார்வையாளர்கள் மூவரும் தமது காலை, மாலை வேலைகளை (shift Duty) 10 நாட்களுக்கு ஒருமுறை மாற்றம் செய்வதனை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/09**

திருநெல்வேலிச்சந்தையின் விளம்பர சேவையினை காவலாளி அறைக்கு மாற்றுவதுடன் கமேரா அறை திறப்பினை தலைமை அலுவலகத்தில் வைத்து எடுப்பதென சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/10**

உப வாடகையில் இயங்கி வந்த 32ஆம் இலக்க பிணக்கில் காணப்பட்ட சபைக் கடையினை வாடகை ஒப்பந்தம் மூலமாகப் பெற்ற முருகேசு பத்மநாதன் என்பவர் கடையினை பொறுப்பேற்குமாறு கோரியதற்கமைவாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு குறித்த கடையினை சபை பொறுப்பேற்று மீள் கேள்வி கோருவதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர்களான திருமதி.அ.அகிலாண்டரூபி,செல்விகு.பிரிந்தா, திரு.தா.தியாகமூர்த்தி அகியோர் மு.ப.10.40 மணியளவில் சபைக்கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து யூன் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/11**

யூன் மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான கீழ்வரும் அறிக்கையினை சபை ஏற்று அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - ஆனி - 2022 | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | | |
| **இல** | **வி இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அனு. திகதி** |
| 1 | N/30/2022 | வா.புஸ்பராணி | முள்ளி வீதி | மதில் | 03.06.2022 |
| 2 | N/29/2022 | சே.வருண்பிரசாந் | முக்குறுணிப்பிள்ளையார் வீதி | 2 மாடி வீடு | 03.06.2022 |
| 3 | N/150/2021 | யோ.ஜெருஷா | பலாலி வீதி | 3 மாடி வீடு | 03.06.2022 |
| 4 | N/33/2021 | சி.புஸ்பாவதி | பலாலி வீதி | 2 மாடி | 03.06.2022 |
| 5 | N/107/2020 | த.தாக்ஷாயினி | மாரியம்மன் வீதி | 2 மாடி வீடு | 03.06.2022 |
| 6 | N/79/2021 | க.நடராசா | கண்டி வீதி | 2 மாடி வீடு, கடை | 03.06.2022 |
| 7 | N/27/2018 | இ.ஜெயக்குமாரி | நாவலடி ஒழுங்கை | COC - வீடு | 10.06.2022 |
| 8 | N/91/2020 | வி.அபிராமி | கலாசாலை 5ம் ஒழுங்கை | COC 2 மாடி வீடு | 10.06.2022 |
| 9 | N/13/2019 | ப.பிரவீணா | முக்குறுணிப்பிள்ளையார் வீதி | COC 2 மாடி வீடு | 10.06.2022 |
| 10 | N/130/2021 | நா.ஜெகசோதி | பிள்ளையார் கோயில் ஒழுங்கை | 2 மாடி வீடு | 10.06.2022 |
| 11 | N/100/2020 | த.ஜெயமதி | அரசடி ஒழுங்கை | COC - வீடு | 10.06.2022 |
| 12 | N/124/2021 | அ.சுபாசினி | ஸ்ரேசன் வீதி | 2 மாடி வீடு | 10.06.2022 |
| 13 | N/24/2022 | .ஸ்ரீ.பரிமளாதேவி | ஆடியபாதம் வீதி | வீடு, மதில் | 17.06.2022 |
| 14 | N/33/2022 | பே.ஸ்ரீரஞ்சன் | கலாசாலை 3ம் ஒழுங்கை | வீடு | 17.06.2022 |

| கொக்குவில் உப அலுவலகம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **இல** | **விண்.இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அ .திகதி** |
| 1 | K/18/2021 | சி.சிவலிங்கம் | தேவாலய ஒழுங்கை | COC 2 மாடி | 03.06.2022 |
| 2 | K/61/2022 | ப.சர்மிலா | முத்தட்டுமடம் வீதி | வீடு | 03.06.2022 |
| 3 | K/176/2021 | அ.சதானந்தன் | K.K.S வீதி | மதில் | 03.06.2022 |
| 4 | K/53/2022 | இ.சபரீசன் | முத்தட்டுமடம் 2ம் லேன் | மதில் | 03.06.2022 |
| 5 | K/194/2021 | யோ.சிவயோகம் | K.K.S வீதி | 2 மாடி வீடு | 03.06.2022 |
| 6 | K/57/2022 | பா.கம்ஸா | முருகமூர்த்தி லேன் | 2 மாடி வீடு | 03.06.2022 |
| 7 | K/92/2021 | ச.சந்திராதேவி | பொற்பதி 1ம் லேன் | மதில் & Toilet | 03.06.2022 |
| 8 | K/233/2021 | சு.கணேசநாதன் | நந்தாவில் ஒழுங்கை | 3 மாடி வீடு | 03.06.2022 |
| 9 | K/49/2022 | கு.கௌசிகா | கோட்டைக்காடு சுடலை லேன் | 2 மாடி வீடு | 03.06.2022 |
| 10 | K/02/2022 | க.சுதர்சன் | பிள்ளையார் கோயில் ஒழுங்கை | 2 மாடி வீடு | 10.06.2022 |
| 11 | K/32/2022 | இ.ராதுஷா | மஞ்சத்தடி வீதி | வீடு | 10.06.2022 |
| 12 | K/48/2022 | ஆ.தாட்சாயினி | இருபாலை வீதி | 2 மாடி வீடு | 10.06.2022 |
| 13 | K/41/2022 | சு.ஸ்ரீரங்கநாதன் | முத்தட்டுமடம் லேன் | Kovil & internal wall | 10.06.2022 |
| 14 | K/83/2021 | S.தவானந்தன் | நடராசா வீதி 1ம் ஒழுங்கை | மதில், Bathroom & Water tank | 17.06.2022 |
| 15 | K/25/2022 | க.சுஜிதா | பலாலி வீதி | கடை | 17.06.2022 |
| 16 | K/50/2022 | ஜெ.ஜெயமாலினி | கோட்டைக்காடு லேன் | வீடு | 17.06.2022 |

நிகழ்ச்சி நிரலில் அடுத்து யூன் மாதத்திற்கான கொடுப்பனவுகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விபரம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/12**

யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| | Date | Cash Book 162-1001-00000-920 Details - June 2022 | | Cash | XE |
|---|---|---|---|---|---|
| | 6 | மகாத்மாஜீ மற்றும் ஏனையன | சனசமூக நிலையக் கொடுப்பனவு | 30,000.00 | |
| | | வேதபாராயண மற்றும் ஏனையன | சனசமூக நிலையக் கொடுப்பனவு | 20,000.00 | |
| | | பூம்புகார் மற்றும் ஏனையன | சனசமூக நிலையக் கொடுப்பனவு | 100,000.00 | |
| | | சிற்றி மெடிக்கல் கெயார் | தள்ளும் இருக்கை கொள்வனவு | 34,950.00 | |
| | | ஸ்ரார் அட்வடைசிங் | பெயர்ப் பலகை மற்றும் வழிகாட்டல் பலகை | 285,000.00 | |
| | | | | **469,950.00** | **-** |
| | 8 | பொற்பதி சனசமூக நிலையம் | திண்மக் கழிவகற்றல் கூலிக் கொடுப்பனவு | 559,632.00 | |
| | | செயலாளர் நல்லூர் பிரதேச சபை | சில்லறைக் கட்டுநிதி | 9,755.00 | |
| | | நேசன் பில்டர்ஸ் | வட்டாரம் 02 வீதித் திருத்தம் | 2,148,621.83 | 112,595.97 |
| | | டீஜெனிக்ஸ் நிறுவனம் | மங் கிவ்வா கணணி மென்பொருள் | 90,000.00 | |
| | | | | **2,808,008.83** | **112,595.97** |
| | | | | **469,950.00** | **-** |
| | | | | **3,277,958.83** | **112,595.97** |
| | 9 | ஸ்ரீலங்கா ரெலிகொம் | தொலைபேசிக் கொடுப்பனவு | 14,662.92 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் பட்டியல் கொடுப்பனவு | 8,386.80 | |
| | | சு.சுதாகரன் | வாகன அனுமதிப் பத்திரம் | 12,270.00 | |
| | | அட்வான்ஸ் ரெக்னோலொஜி நிறுவனம் | கணணித் திருத்தம் | 8,850.00 | |
| | | அ.டெனின் | மேலதிக குத்தகை அறவீடு மீளளிப்பு | 31,319.35 | |
| | | ந.உதயகுமார் | மேலதிக குத்தகை அறவீடு மீளளிப்பு | 16,446.39 | |
| | | ஜே.எம.இக்ஸான் | மேலதிக குத்தகை அறவீடு மீளளிப்பு | 17,328.31 | |
| | | உழியர்கள் | மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு | 71,990.00 | |
| | | சி.ரஞ்சிதமலர் | நூல் கொள்வனவு | 180.00 | |
| | | க.கிருபாகரன் | நூல் கொள்வனவு | 400.00 | |
| | | பணிப்பாளர், ஓய்வூதியத் திணைக்களம் | விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய கொடுப்பனவு | 28,373.97 | |
| | | மு.டினேஸ் | மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு | 4,998.33 | |
| | | தி.மலர்வேந்தன் | மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு | 2,145.80 | |
| | | ந.ரவிச்சந்திரன் | மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு | 2,972.00 | |
| | | | | **220,323.87** | **-** |
| | | | | **3,277,958.83** | **112,595.97** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | **3,498,282.70** | **112,595.97** |
| | 16 | யாழ்மாவட்ட கூட்டுறவுச் சபை | ஆவணங்கள் அச்சிடல் | 22,650.00 | |
| | | ச.சோபனா | மரக் கன்று கொள்வனவு | 3,900.00 | |
| | | சிவன் ஸ்ரோர்ஸ் | பத்திரிகைக் கொள்வனவு | 3,800.00 | |
| | | அ.செந்தூரச் செல்வம | நடுக்கட்டல் உத்தியோகத்தர் கொடுப்பனவு | 6,123.00 | |
| | | ஸ்ரார் அட்வடைசிங் | டெங்கு துண்டுப் பிரசுரம் அச்சிடல் | 1,250.00 | |
| | | ஹை ரெக் எலிவேரர்ஸ நிறுவனம் | மின்னுயர்த்தி பற்றறி மாற்றியமை | 60,000.00 | |
| | | வலம்புரி | சாரதிச் சேவை கூறுவிலை கோரல் விளம்பரம் | 7,125.00 | |
| | | சி.ஜயககுமரன் | கேள்வி வைப்பு மீளளிப்பு | 5,000.00 | |
| | | சி.சிவானுஜன் | இறைச்சசிக் கடை மேற்பார்வை | 3,806.50 | |
| | | க.சேனாதிராசா | மயான கட்டண கொடுப்பனவு | 2,000.00 | |
| | | ந.நடேசு | மயான கட்டண கொடுப்பனவு | 400.00 | |
| | | க.சேனாதிராசா | மயான கட்டண கொடுப்பனவு | 1,000.00 | |
| | | ந.நடேசு | மயான கட்டண கொடுப்பனவு | 1,200.00 | |
| | | இலங்கை மின்சார சபை | மின்பட்டியல் கொடுப்பனவு | 587.70 | |
| | | | | **118,842.20** | **-** |
| | | | | **3,498,282.70** | **112,595.97** |
| | | | | **3,617,124.90** | **112,595.97** |
| | 22 | சக்தி என்ஜியரிங்க | வட்டார வீதி புனரமைப்பு வட்டாரம் 06 | 212,270.35 | |
| | | சன்ரா செக்குரிட்டி சேவிஸ் | காவற் கடமை சேவை | 159,457.50 | |
| | | நல்லூர் ப.நோ.கூ. சங்கம் | எரிபொருள் கொடுப்பனவு | 200,880.00 | |
| | | ஆணையாளர், மாநகர சபை | திண்மக் கழிவகற்றல் | 90,000.00 | |
| | | கோல்டன் ஈகிள் கே.ரி. நிறுவனம் | சாரத்தியக் கடமை | 80,535.00 | |
| | | வளர்மதி ரேனிங் வேக்ஸ் | தண்ணீர் தாங்கி வாகன திருத்தம் | 4,500.00 | |
| | | வளர்மதி ரேனிங் வேக்ஸ் | வாகனத் திருத்தம் | 4,500.00 | |
| | | வளர்மதி ரேனிங் வேக்ஸ் | வாகனத் திருத்தம் | 4,000.00 | |
| | | க.ஜெகதீசன் | வாகனத் திருத்தம் | 3,750.00 | |
| | | செல்வம்ஸ் | வாகன பற்றறி கொள்வனவு | 22,000.00 | |
| | | லங்கா அசோக் லேலண்ட் | வாகனத் திருத்தம் | 15,373.94 | |
| | | தரணிகா மோட்டர்ஸ் | வாகனத் திருத்தம் | 7,350.00 | |
| | | க.ஜெயக்குமார் | வாகன ரயர் மாற்றியமை | 3,700.00 | |
| | | என்.தவராசா | வட்டார வீதி புனரமைப்பு வட்டாரம் 12 | 2,303,612.27 | 323,342.23 |
| | | நல்லூர் ப.நோ.கூ. சங்கம் | எரிபொருள் கொடுப்பனவு | 419,040.00 | |
| | | | | **3,530,969.06** | **323,342.23** |
| | | | | **3,617,124.90** | **112,595.97** |
| | | | | **7,148,093.96** | **435,938.20** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 28 | ஊழியர்கள் | காவலாளி மேலதிக நேரக் கொடுப்பனவு | 75,938.85 | |
| | | செயலாளர் நல்லூர் பிரதேச சபை | எரிபொருள் கொடுப்பனவு | 10,000.00 | |
| | | | | **85,938.85** | **-** |
| | | | | **7,148,093.96** | **435,938.20** |
| | | | | **7,234,032.81** | **435,938.20** |
| | 29 | கே.ஜெகதீசன் | வாகனத் திருத்தம் | 4,850.00 | |
| | | சிவன் ஸ்ரோர்ஸ் | பத்திரிகைக் கொள்வனவு | 8,400.00 | |
| | | கெஸ்ரன் சேவிஸ் | சந்தை துப்பரவுப் பணி | 200,910.00 | |
| | | நவரத்தினம் பேனிச்சர்ஸ் | வாழ்வாதார உதவிக்கான கோழிக் கூடு கொடுப்னவு | 126,000.00 | |
| | | நவரத்தினம் பேனிச்சர்ஸ் | மாற்றுவலுவுள்ளோர் நலநோன்பு | 44,000.00 | |
| | | ஸ்ரீலங்கா ரெலிகொம் | தொலைபேசிக் கொடுப்பனவு | 12,279.55 | |
| | | நியு ஸ்ரக்சரல் சிவல் கொன்ஸ்ரக்சன் | பிடி பணம் விடுவிப்பு | 14,141.20 | |
| | | தரணிகா மோட்டர்ஸ் | வாகனத் திருத்தம் | 10,500.00 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் பட்டியல் கொடுப்பனவு | 8,361.60 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் பட்டியல் கொடுப்பனவு | 752.40 | |
| | | இரட்ணம் பில்லிங் ரேசன் | எரிபொருள் கொடுப்பனவு | 216,409.76 | |
| | | ஐ.சோபிகா | இடர் கடன் கொடுப்பனவு | 250,000.00 | |
| | | க.சேனாதிராசா | இடர் கடன் கொடுப்பனவு | 231,250.00 | 18,750.00 |
| | | தி.ஆஸா | இடர் கடன் கொடுப்பனவு | 250,000.00 | |
| | | என்.ஜீபிகா | இடர் கடன் கொடுப்பனவு | 250,000.00 | |
| | | ரீ சிவில் கொன்ஸ்ரக்சன் | பிடி பணம் விடுவிப்பு | 48,838.35 | |
| | | பிரதிப் பணிப்பாளர் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் | வாழ்வாதார உதவிக்கான கோழ கொடுப்னவு | 53,600.00 | |
| | | இ.இளஞ்செழியன் | விளம்பர வைப்பு மீளளிப்பு | 2,060.00 | |
| | | கிறிஸ்ரன் உதயகுமார் | விளம்பர வைப்பு மீளளிப்பு | 3,710.00 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் பட்டியல் கொடுப்பனவு | 11,128.50 | |
| | | அட்வான்ஸ் ரெக்னோலொஜி நிறுவனம் | கணணித் திருத்தம் | 9,500.00 | |
| | | நல்லூர் ப.நோ.கூ. சுங்கம் | சுத்திகரிப்பு பணிக்கான க்ளவுஸ் கொள்வனவு | 7,200.00 | |
| | | நேசன் பில்டர்ஸ் | வட்டார வீதித் திருத்தம் வட்டாரம் 05 | 338,282.97 | 12,467.83 |
| | | தினக்குரல் ப்த்திரிகை | ஏல விற்பனை விளம்பரம் | 595,786.48 | |
| | | வலம்புரி | மீள் கேள்வி விளம்பரம் | 7,650.00 | |
| | | பிரதம கணக்காளர் இலங்கை ரயில்வே திணைக்களம் | புகையிரத ஆணைச் சீட்டு கொடுப்பனவு | 9,375.00 | |
| | | கல்பனா சந்திரசேகர் | நூல் கொள்வனவு | 1,700.00 | |
| | | ஆணையாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | முத்திரைக் கொடுப்பனவு | 1,710.00 | |
| | | ஏ.ஜெயமோகன் | வைப்பு மீளளிப்பு | 12,800.00 | |
| | | | | **2,731,195.81** | **31,217.83** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 7,234,032.81 | 435,938.20 |
| | | | | 9,965,228.62 | 467,156.03 |

## Cash Book 1095945 - June 2022

| V.No | Date | Details | Cash | XE |
|---|---|---|---|---|
| SA/01 | 3 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 5,254,215.38 | |
| | | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 246,836.87 | |
| Sa/02 | | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 29,125.00 | |
| | | செலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | | ஆளுநரின் செயலாளர் வடமாகாணம் | 1,250.00 | |
| | | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 5,606.00 | |
| SA/03 | 21 | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 587,415.58 | 19,381.73 |
| | | | 6,128,186.83 | 19,381.73 |
| | | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 670,784.00 | |
| | | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 28,341.00 | |
| | | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 2,350.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | | 375.00 |
| | | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 148,640.00 | |
| | | முகாமையாளர், கொமர்சியல் வங்கி திருநெல்வேலி | 97,750.00 | |
| | | முகாமையாளர், ஹற்றன் நசனல் வங்கி திருநெல்வேலி | 14,780.00 | |
| | | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி | 13,750.00 | |
| | | முகாமையாளர், மக்கள் வங்கி திருநெல்வேலி | 14,000.00 | |
| | | நலன்புரிச் சங்கம் பிரதேச சபை நல்லூர் | 4,230.00 | |
| SA/04 | 28 | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 14,850.00 | |
| | | பொருளாளர் ஐக்கிய தேசியக் கட்சி | 1,000.00 | |
| | | இலங்கை தமிழரசுக் கட்சி | 4,000.00 | |
| | | தமிழ் தேசிய மக்கள் முன்னணி | 2,000.00 | |
| | | | 1,016,475.00 | 375.00 |
| | | | 6,128,186.83 | 19,381.73 |
| | | | 7,144,661.83 | 19,756.73 |
| | | | 48,510.60 | |
| | | | 48,510.60 | - |
| | | | 7,144,661.83 | 19,756.73 |
| | | | 7,193,172.43 | 19,756.73 |

| | Cash Book 0089003009-June 2022 | | | |
|---|---|---|---|---|
| V.No | Date | Details | Cash | XE |
| LDSP/01 | 6 | சக்கர நாற்காலி கொள்வனவு | 27,650.00 | |
| | | | 27,650.00 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| LDSP/02 | 15 | கொக்குவில் நவீன சந்தை கடைத்தொகுதி அமைத்தல் 5வது பகுதிக் கொடுப்பனவு | 818,450.60 | |
| | | | 818,450.60 | - |
| | | | 27,650.00 | - |
| | | | 846,100.60 | - |
| LDSP/03 | 22 | கொக்குவில் நவீன சந்தை கடைத்தொகுதி அமைத்தல் 5வது பகுதிக் கொடுப்பனவுக்கான வற் கொடுப்பனவு | 65,888.85 | |
| | | | 65,888.85 | - |
| | | | 846,100.60 | - |
| | | | 911,989.45 | - |
| LDSP/04 | 23 | PT 01 கனணி, தையல் பயிற்சி வகுப்பு இறுதிக்கொடுப்பனவு | 133,632.00 | |
| | | | 133,632.00 | - |
| | | | 911,989.45 | - |
| | | | 1,045,621.45 | - |

நிகழ்ச்சி நிரலில் அடுத்து யூன் மாத வருமான செலவு அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விபரம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/13**
யூன் மாத வருமான செலவு அறிக்கையினை சபை ஏற்று அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 09வது விடயம் ஏனையவை. குறித்த ஏனையவையில் ஆகஸ்ட் மாதம் இடர் கடன் வழங்குவதற்கான உத்தியோகத்தர் விபரம் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/14**
ஆகஸ்ட் மாதம் கீழ்வரும் உத்தியோகத்தருக்கு இடர் கடன் வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.சு.விஜயகுமாரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திருமதி.செ.சந்திரேஸ்வரி – 250,000.00

ஏனையவையில் அரசின் 2 மில்லியன் அபிவிருத்தித்திட்டத்தில் பிரதேச செயலகமூடாக அனுமதிக்கப்பட்ட வீதிவிளக்கு கொள்வனவிற்கான கொடுப்பனவு ரூபா 1,747,168.00 மத்திய திறைசேரியால் விடுவிக்கப்படாமையால் குறித்த நிதியினை முற்பணமூடாக வழங்கி பின்னர் குறித்த நிதி திறைசேரியால் கிடைக்கப்பெற்றது முற்பணத்தை சீர்செய்வது எனவும் அவ்வாறு குறித்த நிதி கிடைக்கா விட்டால் அவற்றை சபை நிதியில் கொள்வனவு செய்ததாக கருதி பாதீட்டில் ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டமாக மேற்கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/15**
அரசின் 2 மில்லியன் அபிவிருத்தித்திட்டத்தில் பிரதேச செயலகமூடாக அனுமதிக்கப்பட்ட வீதிவிளக்கு கொள்வனவிற்கான கொடுப்பனவுத்தொகையினை மத்திய திறைசேரி விடுவிக்கப்படாமையால் குறித்த

கொடுப்பனவு ரூபா 1,747,168.00 வினை சபைநிதியிலிருந்து முற்பணமூடாக செல்வா எலக்ரிக்கல் நிறுவனத்திற்கு வழங்குவதெனவும் குறித்த நிதி விடுவிக்கப்பட்டதும் சீர்செய்வதெனவும் அவ்வாறு அவ் நிதி திறைசேரியால் விடுவிக்காத விடத்து அதனை பாதீட்டில் ஒதுக்கியதாகக் கருதி வேலைத்திட்டத்தை மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனையவையில் அடுத்து விளம்பரப்பலகைக்கான கட்டணம் தொடர்பாக ஏற்கனவே சபையால் ஒரு சதுர அடிக்கு ரூபா 200.00 யாகவே அறவிடப்பட்டு வந்தது. தற்போது எமது சபை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குள் உள்வாங்கப்பட்டமையால் நகர அபிவிருத்தி அதிகார சபையால் விளம்பரப்பலகைக்கான கட்டணமாக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 500.00 ஆக வர்த்தமானி பத்திரிகை மூலம் அறவீடு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறித்த கட்டண மாற்றம் தொடர்பாக விளம்பரதாரரால் பல முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளது. ஆகவே சபையால் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசுரித்தவாறே ஒரு சதுர அடிக்கு ரூபா 200.00 ஆக தொடர்ந்தும் அறவிடுவதற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/16**

சபையால் ஒரு சதுர அடிக்கு ரூபா 200.00 வாக அறவீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் எமது சபை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குள் உள்வாங்கப்பட்டமையால் நகர அபிவிருத்தி அதிகார சபையால் விளம்பரப்பலகைக்கான கட்டணமாக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 500.00 ஆக வர்த்தமானி பத்திரிகை மூலம் அறவீடு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த கட்டண மாற்றம் தொடர்பாக விளம்பரதாரரால் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமையால் மக்கள் நலன் கருதி சபையால் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசுரித்தவாறே ஒரு சதுர அடிக்கு ரூபா 200.00 ஆக தொடர்ந்தும் அறவிடுவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் கருத்துரைக்கையில் தற்போதைய எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மக்கள் மத்தியில் துவிச்சக்கர வண்டி பாவனை அதிகரித்துள்ளது. அதன் காரணமாக துவிச்சக்சர வண்டிகள் திருட்டும் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறு திருடப்படும் துவிச்சக்கர வண்டிகளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்குரிய ஆவணம் இல்லாது மக்கள் இடர்படுவதையும் அவதானிக்க முடிந்தது. எனவே உடனடியாக துவிச்சக்கர வண்டிக்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு பத்திரிகையில் விளம்பரம் செய்து அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். துவிச்சக்க ரவண்டி களவாடும் சந்தர்ப்பத்தில் குறித்த அனுமதிப்பத்திரம் மக்களுக்கு சாலச் சிறந்ததாக அமையும் எனவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/17**

துவிச்சக்கர வண்டிக்கான அனுமதிப்பத்திர நிர்வாகச் செலவாக ஏற்கனவே இருந்த ரூபா 20 லிருந்து ரூபா 50.00 வாக அதிகரித்து அறவிடு செய்வதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் தமது வட்டாரத்தில் புதிய வீதிக்கான வீதிப்பெயர்ப்பலகை பொருத்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் மூன்று தடவைகள் கேள்வி கோரப்பட்டது. விலையேற்றம் காரணமாக தடைப்பட்டு தற்போது தான் நடைமுறைச் சாத்தியமாகியுள்ளது. அவற்றில் முதல் கட்டமாக 40 பிரதான வீதிகளுக்கு பெயர்ப்பலகை வழங்கவுள்ளோம். அதனைத்தொடர்ந்து அடுத்த கட்டங்களாக ஏனைய வீதிகளுக்கும் பொருத்தப்படும். அவசர தேவை கஉப வீதிகளில் வதிவோர் பெயர்ப்பலகை பொருத்துவதற்கு முன்வரும் சந்தர்ப்பத்தில் சபை அனுமதியுடன் சபையுடன் இணைந்து செயற்பட இடமுண்டு எனத் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து LDSP - PT 01 வேலைத்திட்டத்தில் புதுப்பிக்கத்தக்க சூரிய மின்கலம் பொருத்துதல் வேலைக்கான கேள்வி கோரிய போது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் வேலையினை ஏற்றுக்கொள்ளாமையால் மீளக் கேள்வி கோரப்பட்டது. அதன் போது குறித்த வேலைக்கு எவரும் விண்ணப்பிக்காமையாலும் அவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகள் காரணமாகவும் அவ்வேலைக்கு பதிலாக அதே ஒதுக்கீட்டில் கொக்குவில் ஆயுள்வேத வைத்தியசாலை வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடம் அமைப்பதற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/18**

LDSP - PT 01(1st 50%) வேலைத்திட்டத்தில் அனுமதி பெறப்பட்ட புதுப்பிக்கத்தக்க சூரிய மின்கலம் பொருத்தும் வேலைக்கான கேள்வி கோரலின் போது முதல் தடவையில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் வேலையினை ஏற்றுக்கொள்ளாமையினாலும் மீள் கேள்வி கோரலின் போது எவரும் விண்ணப்பிக்காமையினாலும் குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகள் காரணமாக குறித்த வேலைக்கு பதிலாக அதே ஒதுக்கீட்டில் (01 Mn) கொக்குவில் ஆயுள்வேத வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடம் அமைப்பதற்கான வேலையினை மேற்கொள்ள உரிய அனுமதியினை பெற்று மேற்கொள்வதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் மு.ப.10.45 மணியளவில் சபைக்கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன் அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத்தந்துள்ளமையினை சபைக்கு தெரிவித்து அவருக்கான விடுமுறை அனுமதியினை சபையிடம் கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/19**

எமது கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன் அவர்கள் சுகயீனம் காரணமாக இன்றைய (11.07.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத்தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து நிதிக்குழு மற்றும் பெறுகைக்குழு கூட்டங்களுக்கு செயலாளர் அவர்கள் சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் அவர் சார்பாக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அல்லது கணக்குக் கிளைத்தலைவர் சமூகமளிப்பதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/20**

நிதிக்குழு மற்றும் பெறுகைக்குழு கூட்டங்களுக்கு செயலாளர் அவர்கள் சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் அவர் சார்பாக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அல்லது கணக்குக் கிளைத்தலைவர் பங்குபற்றி கூட்ட ஆவணங்களில் கையொப்பமிட சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் ஏனைய விடயத்தில் கருத்துரைக்கையில் தற்போது சுகாதாரக்குழு இயங்குவதில்லை போல உள்ளது. தாம் சுகாதாரக்குழுவில் அங்கம் வகிப்பதாகவும் தமக்கு கூட்ட அறிவித்தல் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். எமது

நல்லூர் பிரதேசசபைப்பகுதிக்கு சுகாதாரம் முக்கியமான விடயம். தற்போது எரிபொருள் பிரச்சனை காரணமாக கழிவகற்றலிலும் இடர்பாடுகள் காணப்படுகின்றது. எனவே சுகாதாரக்குழு திறம்பட இயங்கினால் தான் இவற்றுக்கான தீர்வுகளை சீர் செய்யமுடியும். ஆகவே சுகாதாரக்குழு திறம்பட இயங்க கௌரவ தவிசாளர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் எனத்தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்த குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கௌரவ உறுப்பினரும் சுகாதாரக்குழு தலைவருமாகிய திரு.க.முருகையா அவர்களின் சம்மதத்துடன் கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களை சுகாதாரக்குழு தலைவராக தேர்வு செய்வதென தீர்மானிக்கப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/21**
சுகாதாரக்குழு தலைவராக கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களை தேர்வு செய்வதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் புதிய சுகாதாரக்குழு தலைவர் திரு.தெ.கிரிதரன் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு எதிர்காலத்தில் காலத்தின் தேவையறிந்து வினைத்திறனாக செயலாற்றுமாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கருத்துரைத்த சுகாதாரக்குழு தலைவர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் திண்கம்கழிவகற்றல் என்பது பாரிய சவாலான விடயம் எனவும் அதுவும் தற்போது எரிபொருள் இடர்பாடுகள் காணப்படுகின்றது. நாளைய தினம் கழிவகற்றல் வாகனத்திற்கு எரிபொருள் இல்லை. பிரதான வீதிகளை அண்டிய பகுதிகளின் கழிவகற்றல் மேற்கொள்வதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அது தொடர்பாக கௌரவ தவிசாளர் அவர்கள் மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடும் போது தாமும் அருகில் இருந்ததாகவும் தெரிவித்து குறித்த கழிவகற்றல் செயற்பாட்டிற்கு அனைத்த உறுப்பினாகளினது ஒத்துழைப்பும் கிடைக்கும் என தாம் நம்புவதாகவும் எதிர்வரும் காலங்களில் வினைத்திறனாக செயற்பட அனைவரது ஒத்துழைப்பும் தேவை எனத் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து சபையில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவு தரம் பிரிப்பதற்கும் அவற்றை சேமித்து வைப்பதற்கும் பொருத்தமான இடம்மின்னையாலும் இயற்கை பசளை தயாரிக்க பயன்படும் உக்கக்கூடிய கழிவுகளை பயனற்ற வகையில் கல்லுண்டாய் வெளியில் அகற்றப்பட்டு வருகின்றது. வலி.தென்மேற்கு பிரதேசசபையால் தற்போது கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டமைக்கு அமைவாக ஏற்கனவே வெளிவாரித் தொழிலாளர்களை வழங்கிய கொக்குவில் பொற்பதி சனசமூகநிலையத்திடமிருந்து மேலதிகமாக இரு தொழிலாளர்களை பெற்று அவர்கள் மூலம் எமக்கு மேலதிகமாக கிடைக்கும் திண்மக்கழிவுகளை வலி.தென்மேற்கு பிரதேசசபை தரம் பிரிக்கும் இடத்தில் தரம் பிரித்து வழங்குவதற்கும் அத் தொழிலாளர் வரவு மற்றும் தொழிலாளர் மேற்பார்வையினை வலிதென்மேற்கு பிரதேசசபை உறுத்திப்படுத்தி வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமையால் குறித்த இரு ஊழியரையும் கடந்த மாத சபைக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டமைக்கு அமைவாக 15.06.2022ஆம் திகதி முதல் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறு அமர்த்துவதற்கான சபையின் தழுவு அனுமதியினைக் கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 11.07.2022/22**
சபையால் சேகரிக்கப்படும் திண்மக்கழிவு தரம் பிரிப்பதற்கும் அவற்றை சேமித்து வைப்பதற்கு பொருத்தமான இடமின்மையால் சபையால் இயற்கை பசளை தயாரிப்பதற்கு பயன்படும் உக்கக்கூடிய கழிவுகள் பயனற்ற வகையில் கல்லுண்டாய் வெளியில் அகற்றுவதைக் குறைப்பதற்கும் இயற்கை பசளை உற்பத்தியினை ஊக்குவிக்கும் முகமாக வலி.தென்மேற்கு பிரதேசசபையின் கோரிக்கைக்கு அமைவாக அவர்களால் பசளை தயாரிப்பதற்கு தேவையான கழிவுகளை அவர்களது பசளை தயாரிக்கும் இடத்தில் வைத்து தரம்பிரித்து வழங்குவதற்கு பொற்பதி சனசமூகநிலையமூடாக மேலதிகமாக இரு பணியாளர்களை வெளிவாரி அடிப்படையில் 15.06.2022 முதல் அமர்த்துவதெனவும் அத்தொழிலாளர் வரவு மற்றும் தொழிலாளர் மேற்பார்வை ஆகியவற்றை வலிதென்மேற்கு பிரதேசசபை உறுதிப்படுத்தி வழங்கும் போது அவற்றக்கான கொடுப்பனவினை வழங்க சபை தழுவு அனுமதி வழங்கவதாக கௌரவ திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ தவிசாளர் அவர்களினால் மழைகாலம் நெருங்குவதால் டெங்கு நுளம்பு பெருக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக வட்டார உறுப்பினர்கள் தங்கள் வட்டாரத்தில் தூர்வார வேண்டிய மற்றும் புனரமைக்க வேண்டிய வடிகால்களின் விபரத்தினை விரைவாக வழங்குமாறு சபையினரைக் கேட்டுக்கொண்டார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் கருத்துரைக்கையில் நிதிக்குழுக் கூட்டத்தில் குழு அங்கத்தவர்கள் பங்குபற்றுவதில் சீரின்மை இருப்பதாகவும் அத்துடன் பிரதேசசபையால் தமது வட்டாரத்தில் நாய்களுக்கு ஊசி ஏற்றப்பட்டது. மக்கள் அதில் அதிக ஆர்வம் செலுத்தவில்லை. ஆனால் ஒரு வீட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட நாய்கள் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. குறித்த நாய்கள் மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கின்றன. எனவே நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றுவதில் ஆர்வமில்லாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் தமது வட்டார வடிகால்கள் புனரமைப்பு தொடர்பாக ஏற்கனவே குறிப்பிட்டு அதனை புனரமைத்து தருமாறு கோரி வருவதாகவும் அவற்றை விரைவாக புனரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த கோரிக்கையினை எழுத்து வடிவில் வழங்குமாறும் தெரிவித்து அனைத்து உறுப்பினர்களும் வடிகால் விபரங்களை விரைவாக வழங்கியுதவுமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன் அவர் மேலும் கூறுகையில் கட்டாக்காலி தொடர்பாக சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஒலிபெருக்கி மூலமாகவே அறிவித்தல் மேற்கொள்ள முடியும். வரும் காலத்தில் சுகாதார வைத்திய பணிமனை மூலமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் சபைக்குச் சொந்தமான கிணறுகள் பழடைந்து செல்கின்றது. பாற்பண்ணையில் காணப்படும் கிணறு பாழடைந்துள்ளதாக முறைப்பாடும் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த கிணறுக்கருகிலுள்ள மரங்கள் வெட்டப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தை சனசமூகநிலையமூடாக மேற்கொள்ள வழங்கப்பட்ட போதிலும் அவர்கள் குறித்த வேலையினை செய்ய முன்வரவில்லை. தற்போது அதற்கான மீள் கேள்வி கோரப்பட்டு எவரும் அதனை எடுக்க ஆர்வம் காட்டவில்லை. ஆகவே எமது ஊழியர்கள் மூலமாகத் தான் புனரமைக்க வேண்டும் எனத்தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கௌரவ தவிசாளர் அவர்களினால் நன்றிகள் தெரிவிக்கப்பட்டு கூட்டமானது மு.ப.11.04 மணியளவில் நிறைவடைந்தது

செயலாளர்.